# தேவையில் இருப்பவர்களுக்கு சேவை செய்ய மூப்பர்களை மேய்ப்பர்கள் நியமிக்கின்றனர்.

கிறிஸ்தவ சபையில் இரண்டு வகை ஊழியர்கள் உண்டு:
மூப்பர்கள் மற்றும் கண்காணிகள் - ஸ்தேவான் பெபேயாள் போன்றோர்.

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் D1b யை வாசிக்கவும

**ஜெபம்:** "கர்த்தராகிய இயேசுவே, உமது சபையில் கண்காணிகளை எழுப்புவீராக. அவர்களை நியமிக்க உதவி செய்யும். அவர்கள் தேவையில் இருப்பவர்களுக்கு சேவை செய்யும்போது அவர்களை ஊக்கப்படுத்த உதவுவீராக."

1. **கண்காணிகளை நியமித்து ஊக்கப்படுத்த தேவ வார்த்தையோடு ஆயத்தமாகுக**

**அப். 6:1-6 ல் காண்க.**

- மூப்பர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களின் முக்கிய பணிகள்:
*(மூப்பர்கள் தேவவார்த்தையை வழங்குகின்றனர். கண்காணிகள் நடைமுறைத் தேவைகளை சந்திக்கின்றனர்)*



- விசுவாசிகள் எவ்வாறு கண்காணிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

*(சபை தேர்ந்தெடுத்து, தலைவர்கள் அவர்கள் மேல் கைகளை வைக்கின்றனர்)*

**ரோமர் 16:1-2** ல் காண்க: அப்போஸ்தலர்கள் கண்காணிகளை பற்றி என்ன நினைத்தனர்?

- ஒரு பெண் கண்காணியாகலாமா? *(வச 1)*
- பெபேயாளுக்கு எப்படிப்பட்ட பேர் இருந்தது? *(வச. 2).*

**பிலி. 1:1-2 ல் காண்க:**

- பிலிப்பு சபையில் இருந்த இருவகை ஊழியர்கள் *(மூப்பர்களும் கண்காணிகளும்)*

**1 தீமோ 3:7-13 ல் காண்க:**

- கண்காணிகளை தேர்ந்தெடுப்பதற்கு சில தகுதிகள் (வச. 8-11)
- கண்காணியாக சேவை செய்வதில் சில பலன்கள் (வச 12-13).

**1 பேதுரு 4:8-11 ல் காண்க:**

- இரண்டு வகையான ஆவிக்குரிய வரங்கள் (பேசுதலும் சேவை செய்தலும்)
- கண்காணிகள் கீழ்ப்படிய வேண்டிய இயேசுவின் கட்டளை (அன்பு)
- கண்காணிகளாக சேவை செய்வோருக்கு தேவன் என்ன தருகிறார்? (கிருபையும் பலமும்)

2. **கண்காணிகளை நியமித்து ஊக்கப்படுத்துதல் பற்றி உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்**

☐ **ஜெபம்:** கர்த்தரிடம் இருந்து பலம் பெற்று தேவைப்பட்டவர்களுக்கு சந்தோஷமாக சேவை செய்யும் கண்காணிகளை கர்த்தர் எழுப்பித்தர உங்கள் உடன் வேலையாட்களுடன் ஜெபிக்கவும்.

- ☐ உங்கள் சபையால் சந்திக்கப்படக் கூடிய விசுவாசிகள் மற்றும் சமுதாயத்தின் தேவைகளை அனுமானிக்கவும்.
- ☐ சில விசுவாசிகளிடம் இருந்து குறைகளைக் கேட்டால், அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க என்ன செய்யலாம், யார் அதற்கு உதவி செய்வார்கள் என்பதைக் கலந்தாலோசிக்கவும்.
- ☐ வேதாகமத்தை கற்க உங்களுக்கும் உங்கள் உடன் ஊழியர்களுக்கும் நேரம் இல்லாமல் இருப்பது பற்றியும், எல்லா விசுவாசிகளுக்கும் ஜெபிப்பது பற்றியும், சபை வளர்ச்சிக்கு என்ன செய்வது என்பது பற்றியும் சேர்ந்து பேசவும்.
- ☐ மற்றவர்களுக்கு உதவி செய்யும் வரமும் விருப்பமும் உள்ள விசுவாசிகளைப்பற்றி கலந்துரையாடவும். அத்தகைய விசுவாசிகளுக்காக பெயர் சொல்லி ஜெபிக்கவும்.
- ☐ விசுவாசிகள் மற்றும் சமுதாய அங்கத்தினர்களின் நடைமுறைத் தேவைகளை சந்திக்க அத்தகைய விசுவாசிகளுக்கு இருக்கும் தரிசனத்தைக் குறித்து தொடர்பு கொண்டு பேசவும்.
- ☐ கவனம்: உங்கள் தோட்டத்திலும் வியாபாரத்திலும் விசுவாசிகளை சம்பளம் இன்றி எவ்வாறு வேலை வாங்குவது என்று திட்டம் தீட்ட வேண்டாம்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

- ☐ முதல் கண்காணிகளின் கதையை **அப். 6:1-6** லிருந்து **வாசிக்கவும் அல்லது கூறவும்.**
- ☐ குழந்தைகள் தாங்கள் தயாரித்த நாடகம் மற்றும் கேள்விகளை பெரியவர்களுக்கு வழங்கட்டும்.
- ☐ தேவையில் இருப்பவர்களுக்கு சேவை செய்யும் கண்காணிகளைப் பற்றி வேதம் போதிப்பதை பகுதி 1 லிருந்து கருத்துக்களை சுட்டிக்காட்டி விசுவாசிகளுடன் மீள்பார்வை செய்யவும்.
- ☐ **அப். 9:36-42 லிருந்து தொற்காளின் கதையைக் கூறலாம் அல்லது வாசிக்கவும்.**
- ☐ தேவையில் உள்ளவர்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சியடையும் மக்கள் வழியாக தமது ஜனங்களுக்கு சேவை செய்வதை இயேசு விரும்புகிறார் என்பதைக் குறித்து உரையாடலாம்.
- ☐ பிற விசுவாசிகள் தங்களுக்கு சேவை செய்தது குறித்து விசுவாசிகள் சாட்சி கொடுக்கலாம்.
- ☐ கண்காணியாக சேவை செய்ய ஒரு விசுவாசி ஒத்துக் கொண்டார் என்றால் நீங்களும் மூப்பர்களும் அவர்கள் மேல் கைகளை வைத்து ஆராதனை வேளையில் அவர்களுக்காக ஜெபிக்கவும்.
- ☐ கர்த்தரின் பந்தியை மாற்கு 10:43-45 ஐ வாசித்து அல்லது மனப்பாடமாகக் கூறி அறிமுகப்படுத்தவும்.
- ☐ மாற்கு 10:45 ஐ சேர்ந்து மனப்பாடம் செய்க
- ☐ ஜெபிக்கவும், திட்டங்களை உறுதி செய்யவும், ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுக்களை அமைக்கவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net